எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட 100 வீடுகளையும் கட்டுவது குறித்து துறை ரீதியாக ஆய்வு செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. P. சின்னப்பன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

40—

கால்நடைக் கிளை நிலையம்

***61908—திரு. P. சின்னப்பன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், V. வேடப்பட்டி ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம், V. வேடப்பட்டி ஊராட்சியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புதிய கால்நடைக் கிளை நிலையம் துவக்கக் கோரியுள்ளார்கள். V. வேடப்பட்டி கிராமத்தில் மொத்தம் 157 கால்நடை அலகுகளே உள்ளன. அரசு விதிமுறைகளின்படி, புதிய கால்நடைக் கிளை நிலையம் துவக்க குறைந்தபட்சம் 3,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டும். V. வேடப்பட்டி மற்றும் அதன் சுற்றுப்புறக் கிராமங்களான வேடப்பட்டு, மாமநாயக்கபுரம், விருசம்பட்டி, அரசன்குளம், பல்லாகுளம், கன்னிமார்கோட்டம், மகாராஜபுரம்,

2020 பிப்ரவரி 18]

இலந்தைக்குளம், இலக்கம்பட்டி, மந்திக்குளம் மற்றும் இ. வேலாயுதபுரம் ஆகியவற்றையும் சேர்த்து 3,110 கால்நடை அலகுகள் உள்ளதால், அங்கு புதிய கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் உள்ளன என்பதையும், இதுகுறித்து அரசின் கொள்கை முடிவுக்குட்பட்டு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலனை செய்யப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. P. சின்னப்பன் அவர்கள்.*

திரு. P. சின்னப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் தங்கத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். இரும்பு தேசத்தின் கரும்பு மனிதர், சட்டம்-ஒழுங்கைக் காப்பதில் இரும்பு மனிதர், இந்தியாவின்* Number One *முதல்வர், நம் மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 'ஜல்லிக்கட்டு நாயகர்' நம் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களையும் மற்றும் எங்கள் மண்ணின் மைந்தர் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர், எங்கள் அண்ணன் திரு. கடம்பூர் ராஜு அவர்களையும் வணங்குகிறேன்.*

வானம் பார்த்த பூமி, மழை பெய்தால்தான் எங்கள் பகுதியில் விவசாயம் நடக்கும். வேலிக்காத்தான் மரங்களும், ஆடு, மாடுகளும் நிறைந்த பகுதி. மானாவாரி கரிசல் காட்டில் தமிழகத்திலேயே அதிக காரம் தரும் மிளகாய் வத்தல் அதிகமாக விளைச்சல் தரும் பகுதி, எங்கள் விளாத்திகுளம் தொகுதி. விளாத்திகுளம் தொகுதி மக்களின் பல ஆண்டு கோரிக்கையான, மிளகாய் வத்தல் மையம் அமைத்திட பட்ஜெட்டில் அறிவித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அவர்களுக்கும், எங்கள் அண்ணன் பாசமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் விளாத்திகுளம் தொகுதி மக்களின் சார்பில் முதலில் கோடானு கோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழகத்திலேயே பரப்பளவில் பெரிய தொகுதி எங்கள் விளாத்திகுளம் தொகுதி. 141 கிராம ஊராட்சிகளைக் கொண்ட

தொகுதி விளாத்திகுளம் தொகுதி. 3 வருவாய் வட்டங்களை உள்ளடக்கிய தொகுதி விளாத்திகுளம் தொகுதி. என்றும் புரட்சித் தலைவரின், புரட்சித் தலைவியின் எஃகுக் கோட்டை விளாத்திகுளம் தொகுதி. தற்போது நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலிலும் விளாத்திகுளம் தொகுதிக்குட்பட்ட விளாத்திகுளம், புதூர் 2 ஊராட்சி ஒன்றியங்களிலும் 100 சதவிகிதம் வெற்றி பெற்று, அண்ணன் எடப்பாடியார் அவர்களின் எஃகுக் கோட்டை என்று நிரூபித்த தொகுதி விளாத்திகுளம் தொகுதி. (மேசையைத் தட்டும் ஒலி) முழுக்க முழுக்க ஆடு, மாடுகளை வைத்துத்தான் பிழைப்பு நடத்தி வருகிறார்கள். அம்மா அவர்களின் ஆட்சியிலும், தற்போது அண்ணன் மாண்புமிகு எடப்பாடியார் அவர்களின் ஆட்சியிலும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆடு, மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. அருகில் கால்நடை மருத்துவமனையோ, கால்நடைக் கிளை நிலையமோ இல்லை. ஆகையால், தற்போதுள்ள நிலையைக் கணக்கிட்டு, அங்கே கால்நடைக் கிளை நிலையம் அமைக்கக் கேட்டிருந்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதியாக அமைத்துத் தரப்படும் என்று கூறியிருக்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை நன்றியைக் கூறி விடை பெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு ஒன்றுமில்லை. ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசுகிறபோதெல்லாம் பேரவை முன்னவர் அவர்களைக் குறிப்பிடுகிறபோதெல்லாம், 'ஜல்லிக்கட்டு நாயகன், ஜல்லிக்கட்டு நாயகன்' என்று சொல்கிறார்கள். அதாவது, இதுவரையில் எப்பொழுதாவது நம்முடைய பேரவை முன்னவர் அவர்கள் மாடு பிடித்திருக்கிறாரா? இல்லை, அந்தப் பெயருக்கு ஏற்றபடி ஒரு நாள் அலங்காநல்லூரில் ஏற்பாடு செய்து எங்களையெல்லாம் கூட்டிக் கொண்டு போய் அவர் மாடு பிடிப்பதற்கு ஏற்பாடு செய்வாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன். அவர் வந்தவுடன் கொஞ்சம் கேட்டுச் சொல்கிறீர்களா? (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. சம்பத்து, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.